# நேர்மையான இருதயங்களைத் தேடுதல் (16:40-17:15)

இயேசு, விதைப்பவன் உவமையை விளக்கிக் கூறியபோது, நல்ல நிலம் என்பது, "வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களை" குறிப்பதாகக் கூறினார் (லூக். 8:15). "உண்மையும் நன்மையுமான இருதயங்கள்தான்" நமது நாட்களின் மாபெரும் தேவையாய் இருக்கின்றது. இதற்கான அருமையான விளக்கங்களில் ஒன்று நமது தற்போதய பாடத்தில் காணப்படுகின்றது. "அந்தப் பட்டணத்தார் [பெரோயாவிலிருந்த யூதர்கள்] மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப் 17:11). ஆத்தும ஆதாயத்தை கருத்தூன்றிச் செய்யும் எவரொருவரும் நேர்மையான இருதயங்களைத் தேடுகின்றார். பவுல் கிரேக்க நாட்டினூடே பயணத்தைத் தொடர்ந்தபோது இவ்வகையான இருதயத்தையே அவரும் தேடினார்.

## பிலிப்பியில் நேர்மையான இருதயங்களைத் தேடுதல் (16:40)

நமது முந்திய இரண்டு பாடங்களில், பவுலும் அவரது பயணக் கூட்டாளிகளும் பிலிப்பி பட்டணத்தில் நேர்மையான இருதயங்களைத் தேடுகையில் - அவைகளை அவர்கள், லீதியாள், சிறையதிகாரி மற்றும் அவர்களது

வீட்டார்களிடத்தில் கண்டார்கள், என்பதை நாம் பார்த்தோம். 16ஆம் அதிகாரத்தின் நிறைவு வசனமானது, அவர்கள் மற்றவர் களிடத்திலும் அதைக் கண்டதாகக் கூறுகின்றது: "அந்தப்படி அவர்கள் லீதியாளிடத்திற்குப் போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி ..." (வ. 40அ). அநேக எண்ணிக்கையிலான "சகோதரர்களின்" மனமாற்றத்தினால் அவர்களின் முயற்சிகளைத் தேவன் ஆசீர்வதித்திருந்தார்.

அங்கு சபை தொடங்கப் பெற்றதைக் குறித்து லூக்கா வேறு விபரங்கள் எதையும் பதியவில்லை. பின்னாளில் பவுல், ரோமாபுரியிலிருந்து பிலிப்பி சபைக்கு நிருபம் எழுதும் போது, "... பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக் காரருக்கும் எழுதுகிறதாவது:" (பிலி. 1:1) என்று குறிப்பிட்டார். "கண்காணிகள்" என்பது மூப்பர்களைக் குறிப்பிடும் இன்னொரு வழி முறையாகும். (அப். 20:28க்கான குறிப்பு களைக் காணவும்.) ஒருவேளை பவுல் தாம் புறப்பட்டுச் செல்லு முன்பே அங்கு சபையை ஒழுங்கமைவு செய்திருக்கலாம் (அப். 14:23); ஒருவேளை இந்நிகழ்ச்சி பின்னாளில் நடந்திருக்கலாம்.

பவுலும் சீலாவும் லீதியாளின் வீட்டில் தாங்கள் சந்தித்த சகோதரர்களுக்கு ஆறுதல் கூறிய பின்பு, அவர்கள் (பவுலும் சீலாவும்) நேர்மையான இருதயங்களை மற்ற இடங்களிலும் தேடும்படிக்கு "போய்விட்டார்கள்" (16:40ஆ). அவர்கள் இவ்வாறு சென்ற போது, லூக்கா, புதிதாய்த் தொடங்கிய அந்த சபையில் ஊழியம் செய்யும்படியாகப் பிலிப்பியிலேயே தங்கி விட்டார் என்பது தெளிவாகின்றது. நாம் இம்முடிவுக்கு வருவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன: முதலாவது, பவுலும் சீலாவும் புறப்பட்டுச் செல்லுவதை விளக்குகையில் லூக்கா தன்மைப் பெயர்ச் சொல்லை("நாங்கள்")ப் பயன் படுத்தவில்லை - மற்றும் அவர் 20:5, 6ல் பவுல் மறுபடியும் பிலிப்பி பட்டணத்திற்கு வரும் வரையில் நடந்த நிகழ்ச்சிகள் எவைகளிலும் தன்மைப் பெயர்ச் சொல் பயன்படுத்தியதாக நாம் காண்பதில்லை. (லூக்கா தொடர்ந்து பிலிப்பியில் தங்கி யிருந்த செயலானது, பவுல் பிலிப்பியிலிருந்து சென்ற பின்பும் அவர்மீது பிலிப்பி சபையானது தனிப்பட்ட ஆர்வம் செலுத்

*தியது ஏன் என்பதற்கு விளக்கம் தருவதாயிருக்கக் கூடும்.) தீமோத்தேயுவும் கூட சில காலம் பிலிப்பியிலேயே தங்கி, நிறைவாக பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்தில் கண்டு இணைந்ததாகவும் சிலர் நினைக்கின்றார்கள் (17:1ல் மற்றும் 16:40ல் கூட ''அவர்கள்'' என்ற சொற்றொடர் இருப்பதால், அது பவுலையும், சீலாவையும் குறிக்கும் என்று சிலர் நினைக்கின்றார்கள். அடுத்தப்படியாக தீமோத்தேயு பெரோயாவில்தான் குறிப்பிடப்படுகின்றார் [17:14].)*

## தெசலோனிக்கேயில் நேர்மையான இருதயங்களைத் தேடுதல் *(17:1-10)*

*பவுலும் சீலாவும் புறப்பட்டுச் செல்லுகையில், எக்னேஷியன் சாலையில் மேற்கு முகமாய், ரோமாபுரியை நோக்கிச் செல்லும் திருவிழாக் கூட்டத்துடன் கலந்து பயணம் சென்றார்கள் (வரைபடத்தில் காணவும்). ஒரு நாள் பயணத்திற்கு பிறகு, பிலிப்பி பட்டணம் அமைந்திருந்த மாகாணத்தின் தலைநகரான அம்பிபோலிக்கு வந்து சேர்ந்தார்கள். இன்னும் ஒரு நாள் பயணத்திற்குப் பின்பு அவர்கள் அப்பொலோனியா பட்டணத்தில் இருந்தார்கள் (வ. 1அ). அம்பிபோலி மற்றும் அப்பொலோனியா ஆகிய இரண்டு பட்டணங்களுமே ஒப்பீட்டளவில் சிறிய பட்டணங்களாயிருந்தபடியினால் அங்கு பிரசங்கிப்பதற்கென்று நில்லாமல் ஊழியர்கள் அதைக் கடந்து சென்றார்கள் என்பது தெளிவு.[1] அவர்கள் சென்று சேர வேண்டிய இடம் மக்கெதோனியாவின் தலைநகரான தெசலோனிக்கே பட்டணமாக இருந்தது. இது மகா அலெக்ஸாந்தரின் சகோதரியினுடைய பெயரால் அழைக்கப்பட்டது. தெசலோனிக்கே ஒரு சுதந்தரமான பட்டணமாயிருந்தது,[2] உலகத்தின் அந்தப் பகுதியில் அது ஒரு முக்கியமான துறைமுகப் பட்டணமாகவும் (இன்றைய நாளில் சலோனிக்கா என அழைக்கப்படுகிறது), எபேசு மற்றும் கொரிந்து ஆகிய பட்டணங்களுடன் போட்டியிடக்கூடிய மிகப்பெரிய வர்த்தக மையமாகவும் இருந்தது.*

*எக்னேஷியன் சாலையானது தெசலோனிக்கேயின் மையப் பகுதியில் அதன் முக்கிய தெருவாகக் கடந்து சென்றது. பவுலும்*

சீலாவும் அந்தத் தலைநகரை அடைந்தபோது, பிலிப்பியைப் போலன்றி, தெசலோனிக்கேயில் யூதமக்கள் தொகை கணிச மான அளவுக்கு இருந்ததாகக் கண்டார்கள். இவ்விதமாகப் பவுல் தமது ஊழியத்தை அங்கு ஒரு ஜெப ஆலயத்திற்குச் சென்று தொடங்க முடிந்தது.

> தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கு யூதருக்கு ஒரு ஜெப ஆலயம் இருந்தது. பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபட வும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டிய தென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான் (வ. 1ஆ-3).

யூதர்களுக்குப் பிரசங்கித்ததில் பவுலின் அணுகுமுறையை இவ்வசனங்களில் உள்ள நான்கு வினைச் சொற்கள் புறக் கோடிட்டுக் காண்பிக்கின்றன: (1) அவர் சம்பாஷித்தார், (2) அவர் அறிவித்தார், (3) அவர் காண்பித்தார், மற்றும் (4) அவர் திருஷ்டாந்தப்படுத்தினார் (ஆதாரம் கொடுத்தார்). பவுல் இரண்டு நோக்கங்கள் கொடுத்திருந்தார்: கிறிஸ்து (மேசியா) வானவர் பாடுபட்டு மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டியிருந்தது என்பதைப் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் இருந்து நிரூபித்தல் மற்றும் இயேசுவே இவ்விதம் எதிர் பார்க்கப்பட்டிருந்த மேசியா என்பதைப் பிறகு நிரூபித்தல் ஆகியவையே அந்த நோக்கங்கள் ஆகும். இவைகளில் முதலாவது நோக்கம் மிகவும் கடினமானதாயிருந்தது, ஏனென்றால் பாடுபடும் இரட்சகர் ஒருவரை விசுவாசிப்பது என்பது யூதர்களுக்கு மிகவும் கடினமானதாகக் காணப்பட்டது (1 கொரி. 1:23). பவுல் அவர்களின் மறுப்புக்கள் யாவற்றையும் தகுந்த ‘‘ஆதாரங்கள் கொடுத்ததினால்’’ முறியடித்தார் - “இணைத்துக் காட்டி” என்ற அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தையிலிருந்து இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முதலாவது அவர், பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை மேற்கோள்காட்டி, பிறகு இயேசுவைப் பற்றிய உண்மைகளை

*அந்தத் தீர்க்கதரிசனங்களுடன் ''இணைத்துக் காட்டித்'' திருஷ்டாந்தப்படுத்தியிருப்பார் (உதாரணத்திற்கு அப். 13:16-41ஐக் காணவும்).*

*நேர்மையான இருதயங்களில் சுவிசேஷ விதையானது விதைக்கப்படும் பொழுது, மாற்றமேயின்றி அங்கு ஒரு விளைவு உண்டாகின்றது (லூக். 8:8). ஆகையால் நாம், "அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள்"[3] (வ. 4) என்று வாசிக்கின்றோம். "சிலர்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: ஒரு சில யூதர்களே கிறிஸ்தவர்கள் ஆனார்கள். மறுபக்கத்தில், பக்தியுள்ள கிரேக்கரில் "திரளான ஜனங்கள்" கிறிஸ்தவர்களானார்கள், அவர்களின் ஜெப ஆலய ஆராதனைகளில் கலந்து கொண்டிருந்த "கனம் பொருந்திய ஸ்திரீகளும்" உள்ளடங்கியிருந்தார்கள்.[4]*

*பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு எழுதிய நிருபங்களில் இருந்து, அவரும் சீலாவும் அப்பட்டணத்தில் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக, விக்கிரகாராதனை செய்து கொண்டிருந்த கூட்டத்தாருக்கு அதிகம் பிரசங்கித்தார்கள் என்பது தெளிவாகின்றது (1 தெச. 1:9). அந்த நிருபங்களில் அவர், தாம் வசனத்தை எவ்விதம் பிரசங்கித்திருந்தார் என்பதையும் (1 தெச. 1:6; 2:2, 13), தாமும் சீலாவும் அற்புதங்களைச் செய்ததையும் (1 தெச. 1:5), தாம் எவ்விதம் தெசலோனிக்கேயரை நேசிக்கக் கற்றிருந்தார் என்பதையும் (1 தெச. 2:7, 8) அவர் எடுத்துக் கூறினார். அங்கு ஊழியம் செய்கையில், தாமும் சீலாவும் இரவும் பகலும் வேலை செய்து தங்களையே தாங்கிக் கொண்டதையும் அவர் குறிப்பிட்டார் (1 தெச. 2:9).[5] பவுலுக்கு, இவையெல்லாவற்றையும் விட மாபெரும் வகையில் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது என்னவென்றால், தெசலோனிக்கேயில் அநேகர், சுவிசேஷத்திற்கு நேர்மையான பதில்செயல் செய்ததேயாகும்:*

> *... ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை*

*நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும். … (1 தெச. 1:9, 10).*

*ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு, ஏற்றுக் கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது (1 தெச. 2:13).*

*இங்கு பதில்செயல் செய்தவர்களில் அரிஸ்தர்க்கு மற்றும் செக்குந்து ஆகிய இருவரும் இருந்தார்கள் (20:4; 27:2). அரிஸ்தர்க்கு ஒரு யூதராகவும், செக்குந்து ஒரு கிரேக்கராகவும் இருந்திருக்கலாம் என்ற யூகத்தை அவர்களின் பெயர்கள் உண்டாக்குகின்றன.*

*தெசலோனிக்கேயர்கள் கிறிஸ்தவர்களான பிறகு, பவுல் தொடர்ந்து அவர்களை உபதேசத்திற்கு உட்படும்படி செய்தார் (1 தெச. 4:2, 3, 6; 2 தெச. 2:15; 3:10), அவர்கள் (பவுலும் சீலாவும்) அவர்களை (தெசலோனிக்கேயரை) விட்டுச் செல்லும் நாட்களுக்காக அவர்களை (தெசலோனிக்கேயரை) ஆயத்தப் படுத்தினார்கள். அவர், அவர்களுக்குப் போதிக்கையில், அவர்களுக்கு (14:22) வரவிருந்த உபத்திரவங்களைப் பற்றியும், தமக்கு வரவிருந்த உபத்திரவங்களைப் பற்றியும் கூறினார். பின்னாளில் அவர், "நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்" (1 தெச. 3:4) என்று எழுதினார்.*

*உபத்திரவம் வருவதற்கு அதிக காலம் ஆகவில்லை, ஏனென்றால் நேர்மையான ஒவ்வொரு இருதயத்திற்கும், நூற்றுக்கணக்கான கடினமான இருதயங்களும் உடன் இருந்தன. பவுல் மற்றும் சீலா ஆகியோரின் ஊழியத்தில் வெற்றி அவர்களைத் தொடர்ந்த போது, விசுவாசமற்ற யூதர்கள் அதிகமாய்க் கலகம் செய்யத் தொடங்கினார்கள். நாம், "விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங் கொண்டு வீணராகிய*

*சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு, கூட்டங்கூடி" (அப். 17:5அ, ஆ) என்று வாசிக்கின்றோம்.* NASB*யில் இவ்வசனத்தில் "சந்தை வெளியில் இருந்த" சில பொல்லாதவர் களைச் சேர்த்துக் கொண்டு என்றுள்ளது. "சந்தை வெளியி லிருந்த" என்ற இச்சொற்றொடரானது agoraion என்ற கிரேக்க வார்த்தையின் தாராளமான மொழிபெயர்ப்பான "சந்தை வெளி மனிதர்கள்'' என்பதாகும். சந்தை வெளி (அல்லது அரங்கம்) என்பது நகரின் இருதயம் போன்ற பகுதியாக (16:19க் கான குறிப்புகளைக் காணவும்.) - வர்த்தகம், அரசியல் மற்றும் மதம் ஆகியவற்றின் மையமாகிய பகுதியாக-இருந்தது. மனித இயல்பு என்பது எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரியாகவே இருந்துள்ளது, அந்தப் பகுதியில் கயவர்கள் சிலர் கலகம் செய்ய எப்பொழுதும் தயாராய்ச் சுற்றித் திரிந்து கொண்டிருந்ததைப் பற்றி அறியும் போது, நாம் வியப்பெதுவும் அடைவதில்லை என்று புரூஸ் கூறுகிறார். இந்தச் "சந்தை வெளி மனிதர்களை" சிசரோ, "மேடையின் கீழ் நிற்பவர்கள்" என்று குறிப்பிட்டார்: இவர்கள் அரங்க சாலையில் இருந்த மேடையின் கீழ் நிற்பவர் களாகவும் தொல்லை கொடுக்கும் விதத்தில் பேசுபவர்கள் பற்றி சந்தோஷம் அடைபவர்களாகவும் இருந்தார்கள். பாராட்டு வதற்கோ அல்லது பேச்சொன்றை இடைமறித்துத் தொந்தரவு செய்வதற்கோ இவர்களை வாடகைக்கு அமர்த்த முடியும். அப். 17ல் இவர்கள் மிகவும் மோசமான ஒரு செயலுக்கு வாடகைக்கமர்த்தப்பட்டார்கள் என்பது தெளிவாகும். யூதர்கள், "சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு, கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளியுண்டாக்கி" (வ. 5ஆ) என்று லூக்கா கூறினார்.*

*பவுலும் சீலாவும், யாசோன் என்ற பெயருடைய மனிதரின் வீட்டில் தங்கியிருந்தார்கள் (வ. 7), எனவே அந்தக் கூட்ட மானது அந்தத் திசையில் முன்னேறியது. "யாசோனுடைய[6] வீட்டை வளைந்து கொண்டு, அவர்களைப் [பவுலையும், சீலாவையும்] பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டு வர வகை தேடினார்கள்" (வ. 5இ). "பட்டணத்தார்" என்ற வார்த்தையானது demos என்ற வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாகும். இந்த வார்த்தையிலிருந்துதான் மக்களாட்சி என்று அர்த்தம் தரும்* "Democracy" *என்ற ஆங்கில*

வார்த்தை உருவாயிற்று. விடுதலையான பட்டணம் என்ற வகையில், தெசலோனிக்கே பட்டணமானது மக்கள் மன்றத்தினால் சுய ஆளுகை செய்து கொண்டிருந்த ஒரு பட்டணமாயிருந்தது. ஊழியக்காரர்களை இந்த மன்றத்தின் முன் நிறுத்துவதற்கு அந்தக் கூட்டம் விரும்பியது.

பவுல் மற்றும் சீலா ஆகியோர் வீட்டில் இருந்திருக்கவில்லை அல்லது அக்கூட்டத்தார் நெருங்கிய வேளையில் சகோதரர்கள், பவுலையும் சீலாவையும் இரகசியமாகக் கடத்திச் சென்றிருப்பார்கள்.[7] ஆத்திரம் அடைந்த யூதர்கள் யாசோனையும், புதிய கிறிஸ்தவர்கள் சிலரையும் இழுத்துக் கொண்டு வந்து "பட்டணத்து அதிகாரிகளிடத்தில்" (வ. 6அ) விட்டார்கள். "பட்டணத்து அதிகாரிகள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான politarchas என்பது "நகரம்" (polis) என்ற வார்த்தையுடன் "அதிகாரி" (arch) என்ற வார்த்தையை இணைத்துப் பெறப்பட்டதாகும். புதைபொருள் ஆராய்ச்சியில், தெசலோனிக்கே நகர்மன்றமானது "பட்டணத்து அதிகாரிகள்" (politarchs)[8] என்று அழைக்கப்பட்ட ஐந்து அல்லது ஆறு மனிதர்கள் கொண்ட மக்கள் மன்றத்தால் ஆளுகை செய்யப்பட்டது என்பது உறுதியாகின்றது.

நகர் மன்றத்தினர் முன்பாக நின்ற யூதர்கள், தாங்கள் கலகம் செய்ததற்கான உண்மையான காரணத்தை - சுவிசேஷத்தின் வெற்றியால் தாங்கள் பொறாமை அடைந்ததை-க் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக, பிலிப்பி பட்டணத்தில் அடிமைகளின் எஜமானர்கள் அதிகாரிகளிடத்தில் கூறிய அதே பொய்க் கதையை இவர்களும் இங்கே கூறினார்கள் - அதாவது பவுலும் சீலாவும் கலகம் செய்பவர்கள் என்றும், ரோமருடைய சட்டங்கள் மற்றும் நலன்களுக்கு விரோதமாக இவர்கள் செயல்பட்டார்கள் என்றும் குற்றம் சாட்டினார்கள். அவர்கள் கூக்குரலிடத் தொடங்கினார்கள்: "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக் கொண்டான்.[9] இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய[10] கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு" (வ. 6ஆ, 7). பவுலும் சீலாவும் இல்லாத வேளையில் அவர்களின் மீது இரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள்

கூறப்பட்டன: (1) அவர்கள் கலகம் உண்டாகக் காரணமாயிருந் தார்கள், மற்றும் (2) செசாருக்குப் போட்டியாக அவர்கள் இயேசுவை அரசர் என்றார்கள் (இயேசுவின் மீதும் இதே விதமாக குற்றம் சாட்டப்பட்டது; லூக். 23:2) இவைகளில் முதல் குற்றச் சாட்டானது பகிரங்கமான பொய்யாக இருந்தது. பவுலும் சீலாவும் அல்ல, யூதர்களே "பட்டணத்தில் அமளி யுண்டாக்கி" (வ. 5) இருந்தார்கள். இரண்டாவது குற்றச் சாட்டானது, ஊழியக்காரர்கள் பிரசங்கித்திருந்ததை வேண்டு மென்றே தவறாகத் திரித்துக் கூறியதாக இருந்தது:[11] இயேசு ஒரு இராஜாவாகவே இருக்கின்றார் (1 தீமோ. 6:15); ஆனால் அவரது இராஜ்யமானது "இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோவா. 18:36) என்பதால், அவர் செசாருக்குப் போட்டியானவர் அல்ல (மத். 22:21). யாசோன் இந்தக் கலகக்காரர்களை ஏற்றுக் கொண்டு இவர்களுக்கு உதவி செய்தார் என்பதே அவர் மீது சாட்டப்பட்ட குற்றமாக இருந்தது.

பவுல் மற்றும் சீலாவுக்குத் தொல்லை கொடுப்பதற்கென்றே யூதர்களின் வார்த்தைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஆயினும் அவர்கள் தங்களை அறியாமலேயே, சுவிசேஷத்தின் வல்லமைக்குத் தரப்பட்டவற்றிலேயே மிகவும் உயர்ந்த பாராட்டுகளைச் செலுத்தினார்கள். "உலகத்தைக் கலக்குகிறவர் கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொ டரானது, "இவர்கள் உலகத்தை மேற்பக்கம் கீழ் வரும்படி மாற்றி விட்டார்கள்" என்ற நேரடியான அர்த்தத்தைத் தருகின்றது. ஆங்கிலத்தில் இது "turn upside down" (தலைகீழாகப் புரட்டுதல்) என்றுள்ளது. இச்சொற்றொடரானது, மீனவர்கள் தங்கள் படகின் அடிப்புறத்தில் உரசித் தேய்த்து, பழுது நீக்கி, ஒட்டுகளை மறுபடியும் மறைத்து மற்றும் தமது படகுக்கு வண்ணம் பூசுவதற்காகத் தமது படகைத் தலைகீழாகக் கவிழ்ப்பதைக் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. பாவம் தான் உலகத்தைத் தலைகீழாகக் கவிழ்த்தது (ஆதி. 3) என்பதை யும், சுவிசேஷமானது இதை (உலகத்தை) நேராகத் திருப்பியது என்பதையும் யூதர்கள் உணராதிருந்தார்கள்! நாம் சுவிசேஷத் தைப் பிரசங்கிப்பதால் "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" என்று குற்றம் சாட்டப்படும்படியாக நான் எவ்வளவோ அதிகமாய் இன்னமும் விரும்புகின்றேன்!

யூதர்கள் தங்கள் இருதயங்களில் வெற்றி முழக்கமிட்ட தங்களின் பொய்கள், அறியாமை மற்றும் தப்பெண்ணம் ஆகியவற்றைக் கூறியபோது, அவர்களின் செயல் பின்வருமாறு இருந்தது: "இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப் பண்ணினார்கள். பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக் கொண்டு, அவர்களை விட்டு விட்டார்கள்" (அப். 17:8, 9). "ஜாமீன்" என்பது யாசோனும் மற்றவர்களும் கையெழுத்திட வேண்டிய ஒரு பத்திரமாயிருந்தது, அதற்குப் பின் அவ்விதக் கலகம் ஏதேனும் ஏற்பட்டால், அந்த ஜாமீன் தனது பலத்தை இழந்து போகும், அவர்கள் அபராதம் செலுத்தியாக வேண்டும். ஒருவேளை அது மிகப் பெரிய ஒரு தொகையாக இருந்திருக்கலாம்; ஒருவேளை அது அவர்களின் வீடுகள் மற்றும் இருந்த சொத்துக்கள் ஆகியவற்றுக்கான உறுதிப் பத்திரங்களாய் இருந்திருக்கலாம். பவுலும் சீலாவும் அப்பட்டணத்தை விட்டு உடனே வெளிச் செல்ல வேண்டும், அவர்கள் மறுபடியும் உள்ளே வரக்கூடாது என்பது அந்த ஒப்பந்தத்தில் இருந்த நிபந்தனைகளின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் (1 தெச. 2:18ஐக் காணவும்).

அதிகாரிகளால் இடப்பட்ட நிபந்தனைகள் எதுவாயிருந்தாலும், சபையானது பவுலின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப் பட்டது. இருள் கவிழ்ந்திருந்த வேளையில், கிறிஸ்தவர்கள், "உடனே ... பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள் ..." (அப். 17:10). பவுல் கனத்த இதயத்துடன், தாம் விட்டுச் செல்லும் புதிய, எதிர்ப்பைத் தாங்கும் சக்தியற்ற சபையின் பாதுகாப்பைப் பற்றிய அச்சத்துடன் புறப்பட்டுச் சென்றார் (1 தெச. 1:6; 2:14-16). அவர், தம்மால் உபத்திரவங்களின் மத்தியிலும் தமது விசுவாசத்தைக் காத்துக் கொள்ள முடியும் என்று அறிந்திருந்தார், ஆனால் அவர்களால் முடியுமா?

## பெரோயாவில் நேர்மையான இருதயங்களைத் தேடுதல் (17:10-15)

தெசலோனிக்கேயில் இருந்து மேற்கு - தென்மேற்கில்

பெரோயா பட்டணமானது சுமார் நாற்பது அல்லது ஐம்பது மைல்கள் தொலைவில் இருந்தது, அப்பட்டணமானது புகழ் பெற்ற ஒலிம்பிக் மலைகளின் அடிவாரத்தில் இருந்தது. பவுலும் சீலாவும் எக்னேஷியன் சாலையில் மேற்கு நோக்கி அநேக மைல்கள் பயணம் செய்து, பிறகு தெற்கு முகமாய்ப் பயணம் செய்திருப்பார்கள். சிசெரோவின் கூற்றுப்படி, ஒருவேளை சகோதரர்கள், பவுலையும் சீலாவையும் நகருக்குப் "புறம்பே" அனுப்பி வைத்து, அவர்கள் அங்கு இல்லாதிருந்த நிகழ்ச்சி யானது தெசலோனிக்கேயிலிருந்த யூதர்களின் வெறுப்பைத் தணிக்க உதவும் என்று நம்பியிருக்கலாம். இருப்பினும், பெரோயா பட்டணமானது வளமாக, மக்கள் தொகை மிகுந்த பகுதியின் மையமாக இருந்தபடியால், பவுல் தாம் பிரசங்கிக்கச் செல்ல வேண்டிய இடங்களின் பட்டியலில் அடுத்து பெரோயாவைக் குறித்து வைத்திருக்கவும் சமமான சாத்தியக்கூறு உள்ளது.

பவுலையும் சீலாவையும் பெரோயாவுக்கு அனுப்பிய கிறிஸ்தவர்கள், தெசலோனிக்கேயில் கொந்தளிப்பு அடங்கும் வரையிலும் பவுலும் சீலாவும் யாருமறியாது மறைந்து கொண்டி ருப்பார்கள் என்று நினைத்திருந்தால், அவர்கள் இந்த இரண்டு மனிதர்களையும் சரியாக அறிந்திருக்கவில்லை என்றே அர்த்த மாகின்றது. இவர்கள் பெரோயா சென்று சேர்ந்த உடனேயே, "... யூதருடைய ஜெப ஆலயத்திற்குப் போனார்கள்" (வ. 10ஆ). அவர்கள் மகிழ்ச்சியினால் ஆச்சரியப்படும்படியாக, பெரோயா வின் ஜெப ஆலயமானது நேர்மையான இருதயங்களால் நிறைந்திருந்தது, அங்கு புறஜாதியாரிலிருந்து மட்டுமல்ல யூதரிலிருந்தும் அநேகர் தேவ பயமுள்ளவர்களாயிருந்தார்கள்: "அந்தப் பட்டணத்தார் [யூதர்கள்][12] மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த தினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாய்[13] இருந்தார்கள்" (வ. 11).

தெசலோனிக்கேயில் நடந்த ஊழியமானது,சுவிசேஷம் எவ்விதத்தில் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பதை விளக்கப் படுத்தியதென்றால், பெரோயாவில் நடந்த ஊழியமானது, சுவிசேஷம் எவ்விதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்

என்பதை விளக்கப்படுத்தியது. பவுல் மற்றும் சீலாவின் உரையைக் கேட்டவர்கள் பின்வரும் நான்கு நற்பண்புகளைப் பெற்றிருந்ததாக லூக்காவினால் பாராட்டப்படுகின்றார்கள்: (1) அவர்கள் ஏற்றுக் கொள்பவர்களாய் இருந்தார்கள்: அவர்கள் "மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள்." (2) அவர்கள் ஊக்கத்துடன் கவனிப்பவர்களாய் இருந்தார்கள்: அவர்கள் பவுலுடன் சேர்ந்து வேதவசனங்களைப் படித்து ஆராய்ந்து பார்ப்பதற்குத் தினந்தோறும் கூடிவந்தார்கள். (3) அவர்கள் எச்சரிக்கையுணர்வுடன் இருந்தார்கள்: அவர்களிடத்தில் ஆரோக்கியமான விதத்தில் அவநம்பிக்கை இருந்தது. பவுல் மற்றும் சீலாவின் வார்த்தைகளை அவர்கள் பரிசோதிக்காமல் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவர்கள் "காரியங்கள் இப்படியிருக்கிறதா" என்று பார்க்க வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். நேர்மையான இருதயம் கொண்டிருப்பதற்கும், ஏமாற்றும் எண்ணம் கொண்டிருப்பதற்கும் இடையில் வித்தியாசம் உண்டு. (4) அவர்கள் தேவனுக்கும் அவருடைய வசனத்திற்கும் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தார்கள். மதத்தில் முதன்மையான அதிகாரம் உடையது வேதவசனங்களே என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். பவுல் கூறியவைகளை அவர்கள் தங்களின் முந்திய நம்பிக்கைகளின் வெளிச்சத்தில் பரிசோதிக்கவில்லை. "நடைமுறைக்கு உகந்தது" அல்லது "செயலுக்கு ஏற்றது" எது என்பதன் அடிப்படையிலும் பவுல் கூறியவற்றை அவர்கள் பரிசோதிக்கவில்லை. பவுல் கூறியவற்றை அவர்கள் வேதவசனங்களின் அடிப்படையில் பரிசோதித்தார்கள்! ஒரு அப்போஸ்தலரைப் பரிசோதித்துப் பார்த்தமைக்காக லூக்கா அவர்களைப் பாராட்டினார்! சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் ஏராளமான மக்கள் நமக்குத் தேவை, ஆனால் அவர்கள் அந்த போதனையை ஏற்றுக் கொள்ளுமுன்பு, அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஒரு போதனையானது சத்தியமே என்று வேதாகமத்தின் மூலம் நம்ப வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்றைக்கான சத்தியம் பத்திரிக்கையானது கடல் கடந்த நாடுகளில் உள்ள அநேக வாசகர்களால் பாட நூலாகப் பெற்றுப் படிக்கப்படுவதை அறிந்து, நான் மிகவும் பயம் அடைகின்றேன்: அதாவது, நான் கூறுகிறேன் என்பதற்காகவே சிலர் இவற்றை

ஏற்றுக்கொள்ளக் கூடும் என்ற பயம் எனக்குள்ளது. நான் - அல்லது மற்ற எவரும் - கூறுகின்ற எதையும் தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் பரிசோதித்துப் பாருங்கள். அது சத்தியமானால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்; அது தவறா யிருந்தால், அதைப் புறக்கணித்து விடுங்கள்! இவ்வித நடக்கை யானது கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளும், அதற்கு (சபைக்குப்) புறம்பேயும் இருக்கின்ற யாவருக்கும் ஏற்புடை யதாகும். இந்த "உலகின் கனவைக் காட்டிலும்" அதிகமான தவறுகள்தான், மனிதர்கள் தேவனை மட்டுமே தங்களின் அதிகாரியாக மேற் கொள்வதற்குப் பதிலாக, மற்ற மனிதர்களைத் தங்கள் அதிகாரிகளாக மேற்கொள்ளச் செய்திருக்கின்றன (1 கொரி. 4:6)!

பெரோயாவில் இருந்த யூதர்கள் நேர்மையான இருதயம் கொண்டவர்களாய் இருந்த காரணத்தால், "அதனால் அவர்களில் அநேகம்பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்" (அப். 17:12). வசனம் 4ல் தெசலோனிக்கேயில், அவர்களில் *சிலரும்* என்றுள்ளது, ஆனால் வசனம் 12ல், பெரோயாவில் *அவர்களில் அநேகம் பேரும்* என்றுள்ளது. இவ்விதமாக நாம் நேர்மையற்ற மற்றும் நேர்மையான இருதயங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டைக் காண்கின்றோம்.

பவுலும் சீலாவும் எவ்வளவு நாட்கள் பெரோயாவில் தங்கியிருந்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை, ஆனால் தேவனுடைய மக்களைக் கொண்ட இன்னொரு உள்ளூர் சபையானது நிலைநாட்டப்பட்டது. அங்கு மனம் மாறியவர் களில், பவுலுடன் பின்னாளில் பிரயாணம் செய்த சோபத்தரும் இருந்தார் (20:4).

பவுல் மற்றும் சீலா ஆகியோரின் வெற்றி பற்றிய வார்த்தை யானது தெசலோனிக்கே வரை எட்டியது என்பது தெளிவு. தெசலோனிக்கேயில் இருந்த யூதர்களின் கோபம் தணிந்திருந்த தென்றால், பெரோயாவில் இருந்த யூதர்களில் அநேகர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள் என்ற செய்தியானது அவர்களின் கோபத்தீக்கு மறுபடியும் எண்ணெய் வார்ப்பதாய் இருந்தது. அவர்கள், பவுலைத் தங்களை விட்டு அகற்றி விட்டதாக நினைத்தார்கள், ஆனால் அந்தப் பவுலோ மறுபடியும் தனது

அருவருப்பான போதனைகளை நாற்பது அல்லது ஐம்பது மைல்களுக்குள்ளாகவே போதித்துக் கொண்டிருந்தார்! விரைவிலேயே அவர்கள் பெரோயா செல்லும் சாலையில் இருந்தார்கள்: "பெரோயாவிலும் தேவ வசனம் பவுலினால் அறிவிக்கப்படுகிறதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபோது, அங்கேயும் வந்து ஜனங்களைக் கிளப்பி விட்டார்கள்" (வ. 13; 14:19ஐயும் படிக்கவும்). தெசலோனிக் கேயில் தாங்கள் வெற்றிகரமாய் நிறைவேற்றியிருந்த தந்திரங் களை இங்கும் அவர்கள் பயன்படுத்தியிருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

கூட்டத்தின் கோபமானது பவுலை மையமாகக் கொண்டி ருந்ததால், கிறிஸ்தவர்கள் அவரை - பழிவாங்கும் தன்மையுள்ள தெசலோனிக்கே பட்டணத்து யூதர்களால் எட்ட முடியாத அளவுக்குத் தொலைதூரத்திற்கு - அனுப்பி விட முடிவு செய்தார் கள். மறுபடியும் அவர் சகோதரர்களால் வழி விட்டனுப்பப் பட்டார். இந்த முறை கிரேக்கத்தின் தென்புறம் உள்ள அகாயா நாட்டின் அத்தேனே பட்டணம் வரைக்கும் அவரை அனுப்பி வைத்தார்கள் (வ. 14அ, 15அ). மீண்டும் ஒரு தரம், பவுலுக்குப் புறப்பட்டுச் செல்வது அநேகமாய் மிகவும் கடினமாய் இருந்திருக்கும், ஆனால் மக்கெதோனியாவில் கர்த்தருக்கென்று மூன்று புதிய பிராந்திய சபைகளை விட்டுச் செல்கிறோம் என்ற திருப்தி அவருக்கு இருந்தது. சீலாவும் தீமோத்தேயுவும் பெரோயாவில் இருந்த புதிய கிறிஸ்தவர்களுக்கு உதவுவதற்காக அங்கேயே தங்கி விட்டார்கள்[14] (வ. 14ஆ).

## அத்தேனேயில் நேர்மையான இருதயங்களைத் தேடுதல் (17:14, 15)

பவுலும், பெரோயாவின் சகோதரர்களும் அத்தேனே பட்டணத்துக்கு நடந்து சென்றிருந்தால், அந்தப் பயணத்திற்கு அநேக நாட்கள் ஆகியிருந்திருக்கும். ஆயினும், கப்பலில் செல்ல சில நாட்களே ஆகும் என்பதால் அவ்விதமாகவே அவர்கள் பயணம் செய்திருக்கலாம். "உடனே சகோதரர் பவுலைச் சமுத்திர வழியாய்ப் போக அனுப்பிவிட்டார்கள் ... பவுலை வழிநடத்தினவர்கள் அவனை அத்தேனே பட்டணம்

*வரைக்கும் அழைத்துக்கொண்டுபோய்; ... புறப்பட்டுப் போனார்கள்" (வ. 14, 15).*

*அந்தியோகியா சபையிலிருந்து அனுப்பப்பட்ட நாள் தொடங்கி, அப்பொழுதுதான் பவுல் முதன்முதலாய் தனிமையில் இருந்தார் - உலகத்தின் செல்வாக்கு மிக்க பட்டணம் ஒன்றில் தனித்திருந்தார். அவர் அமிழ்ந்து போனது போல் உணர்ந்தார், ஆனால் (நாம் அடுத்த பாடத்தில் பார்க்கப் போகின்றபடி) அவர், நேர்மையான இருதயங்களைத் தேடுவதை நிறுத்தி விடவில்லை.*

## *முடிவுரை*

*வழக்கம்போலவே, நமது வேதபாடப் பகுதியானது நாம் கற்றுக்கொள்ள அவசியமான பாடங்களால் நிறைந்துள்ளது: (1) தேவனுடைய வசனத்தை நாம் தொடர்ந்து பிரசங்கிக்க வேண்டும். பவுல் "வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து ... சம்பாஷித்து'' (வ. 2; மற்றும் வ. 13ஐயும் காணவும்). (2) விளைவுகள் எப்படியிருந்தாலும், நாம் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும். பவுல் தெசலோனிக்கேயில் "சில" யூதர்களையும், பெரோயாவில் "அநேக" யூதர்களையும் ஞானஸ்நானப்படுத்தினார், ஆனால் இரு இடங்களிலும் ஒரே மாதிரியான விஷயங்களையே பிரசங்கித்தார். நாம் போதிப்பதிலும், கற்பிப்பதிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும், மற்றும் விளைவுகளைத் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்து விட வேண்டும் (1 கொரி. 3:7). (3) நமது உரையைக் கேட்பவர்கள், நாம் கூறுகின்றோம் என்பதற்காக மட்டும் எதையும் நம்பும்படி உற்சாகப்படுத்தி விடக்கூடாது. மாறாக, நாம் (அல்லது வேறு ஒருவர்) போதிக்கின்ற எந்த விஷயமும் வேதவசனங்களின் வெளிச்சத்தில் பரிசோதிக்கப்பட வேண்டும் (வ. 11)! (4) நாம் தேவனுடைய வசனத்தை உண்மையாகப் பிரசங்கித்தால், அது மக்களை-நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ - கலக்குவதாய் இருக்கும். நம்மில் சிலர் அளவுக்கு மீறிய எச்சரிக்கையுள்ளவர்களாய் இருக்கின்றோம்; மற்றவர்களின் மனதைப் புண்படுத்தி விடுவோமோ என்று பயப்படுகின்றோம்.* "The Bible ends with Revolutions" *என்று ஒரு*

சிறுபையன் கூறும்போது அவன் ஒன்றும் பெரிய தவறு செய்து விடவில்லை.

இருப்பினும், இந்தக் கட்டுரையில், நேர்மையான இருதயங்களைத் தேடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்து வதற்கு நாம் முயற்சி செய்திருக்கின்றோம். நாம் பார்த்துள்ள படி, நேர்மையான இருதயங்கள், தேவனுடைய வசனங்கள் பிரசங்கிக்கப்படுகையில் அவ்வசனங்களை ஏற்றுக் கொள்ளும்; நேர்மையற்ற இருதயங்கள் வசனத்தை ஏற்றுக் கொள்வதில்லை. நேர்மையான இருதயங்களை ஒருவர் எவ்வாறு காண முடியும்? துரதிர்ஷ்டவசமாக, மக்கள் "நான் நேர்மையான இருதயத்து டன் இருக்கின்றேன்" அல்லது "நான் நேர்மையற்ற இருதயத்து டன் இருக்கிறேன்" என்பது போன்ற விளம்பரப்பட்டிகளுடன் சுற்றித் திரிவதில்லை. பவுலும் சீலாவும் செய்த செயல் ஒன்று தான் நான் அறிந்த வரையிலும் நேர்மையான இருதயங்களைக் கண்டடைய ஒரே ஒரு வழியாகும்: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறிக் கொண்டே இருங்கள் (2 தீமோ. 4:2), யாரேனும் நேர்மறை யான பதில்செயல் செய்தால் அதற்காகச் சந்தோஷப்படுங்கள், பாராட்டுங்கள்! ஏனெனில் நீங்கள் ஒரு நேர்மையான இருதயத்தைக் கண்டு பிடித்து விட்டீர்கள்!

## பிரசங்கக் குறிப்புகள்

வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் அதிகாரம் 17க்குப் பின்வரு மாறு புறக்குறிப்பு கொடுத்துள்ளார்: (1) தெசலோனிக்கே - வசனத்தை எதிர்த்து நின்றது (2) பெரோயா - வசனத்தை ஏற்றுக் கொண்டது (3) அத்தேனே - வசனத்தை ஏளனம் செய்தது (*The Bible Exposition Commentary*, vol. 1).

இந்தப் பாடத்தில் எண் இடப்பட்டுக் கொடுத்துள்ள கருத்துக்களை நீங்கள் பார்வையிட்டால், வேதவசனப்பாடங் களுக்கான அநேக அற்புதமான கருத்துக்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

அப். 17:11 வசனமானது அன்றாட வேதபாடத்தின் பொதுவான தேவையை உணர்த்தும் ஒரு பிரசங்கம், மற்றும்

வேதவசனத்தின் வெளிச்சத்தில் எல்லா வித மத உபதேசங்களையும் ஆராய்ந்து பார்க்கும் குறிப்பிட்ட தேவையை உணர்த்தும் பிரசங்கம் ஆகியவற்றிற்கு மிகச் சிறந்த ஒரு வசனமாகும்.

---

குறிப்புகள்

[1]*மக்கள் தொகை அதிகம் உள்ள மையங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அங்கிருந்த அதன் சுற்றுப் புறங்களில் சுவிசேஷத்தைப் பரவச் செய்வது என்பதே பவுலின் ஊழிய வியூகமாய் இருந்தது. பிலிப்பி மற்றும் தெசலோனிக்கே ஆகிய பட்டணங்களில் சுவிசேஷமானது பரவினால், அங்கிருந்து அம்பிபோலி மற்றும் அப்பொலோனியா ஆகிய பட்டணங்களுக்கு ஊழியம் செய்யப்பட முடியும் (1 தெச. 1:8ஐக் கவனிக்கவும்).* [2]*தெசலோனிக்கே இதற்கு முன் ரோமாபுரியின் சார்பாக இருந்ததால், சுதந்தரமான பட்டணம் என்று அறிவிக்கப்பட்ட வெகுமதியை அடைந்தது. சுதந்திரமான பட்டணம் என்றால், அது சுய ஆளுகை அமைப்பு உள்ளதாகவும், தங்களுக்கென்று சொந்த நாணயங்களைத் தயார் செய்து கொள்ளவும், அதன் மதில்களுக்குள் ரோமானியப் பாதுகாப்புப் படையைப் பெற்றிராமல் இருக்கவும் உரிமை பெற்றிருந்தது. அது ஒரு ரோமாபுரிப் பட்டணத்தைப் போலன்றி கிரேக்கப் பட்டணம் போல இருந்தது.* [3]Hugo McCord *அவர்கள்* “Joined Company with” *என்கின்றார்கள்* (McCord’s New Testament Translation of the Everlasting Gospel). “Threw in their lot with” *என்ற நேரடி மொழிபெயர்ப்பு உள்ளது.* [4]*மேற்கத்திய வசனத்தின்படி, நகரத்தலைவர்களின் மனைவிகளே “கனம் பொருந்திய ஸ்திரீகள்” என்று கருதப்பட்டனர். யூதமார்க்கத்தின் ஒழுக்கம் மற்றும் நீதி நெறிமுறைகள், புறஜாதிப் பெண்களில் அநேகரைக் கவர்ந்திழுத்தன. வழக்கம் போலவே லூக்கா, பெண்களின் பங்கை உயர்த்தினார்.* [5]*இருந்தாலும், ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அவர் பிலிப்பி பட்டணத்துச் சபையில் இருந்து உதவி பெற்றுக் கொண்டார் (பிலி. 4:15, 16).* [6]*யாசோன் ஒரு கிறிஸ்தவரா இல்லையா என்று நமக்குத் தெரியாது. இவ்வசன பகுதியானது ‘‘யாசோனையும் சில சகோதரரையும்” (வ. 6) என்று வித்தியாசப் படுத்திக் கூறியிருப்பதால், அவர் கிறிஸ்தவரல்ல என்று சுட்டிக்காட்டப்படுவதாய் இருக்கலாம். இருப்பினும் அவர் கிறிஸ்தவராய் இருந்திருக்கலாம் என்ற நம்பிக்கைக்கே நான் வளைந்து கொடுக்கின்றேன். ரோமர் 16:21ல் குறிப்பிடப்பட்ட யாசோன் இவரேயென்று சிலர் நினைக்கின்றார்கள். அப்படியிருந்தால், இவர் பின்னாளில் பவுலுடன் கொரிந்து பட்டணத்திற்குப் பயணமாகியிருக்க வேண்டும்.* [7]*தேவனுடைய அருளிரக்கத்தால், பவுல் (எப்பொழுதுமில்லா விட்டாலும்) அடிக்கடி அவருக்கு நேரவிருந்த துன்பங்கள் பற்றி முன்னெச்சரிப்புப் பெற்றார். இங்கும் அதுபோல நடந்திருக்கலாம்.* [8]*லூக்கா பயன்படுத்திய* “Politarchs” *என்ற வார்த்தையானது உலக வரலாற்று எழுத்துக்களில் காணப்பட்டிராததமையால், தேவநம்பிக்கையற்றவர்கள் பல வருடங்களாக, அறைகூவல் விடுத்துக் கொண்டிருந்தார்கள். பிறகு,* Vardar

Gate கண்டுபிடிக்கப்பட்ட போது, அதில் தெசலோனிக்கே பட்டணத்தின் ஆறு politarchsகளின் பெயர்கள் கொண்ட ஒரு கல்வெட்டைக் கண்டு பிடித்தனர். அந்தக் காலம் தொடங்கி, அதே போன்று வேறு பல கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. [9]யாசோன் ஒரு கிறிஸ்தவராய் இருந்திருந்தால், ஒருவேளை அவர்-லீதியாளைப் போலவே (16:15, 40) - மனம் மாறிய பிறகு பவுலையும் சீலாவையும் தமது வீட்டிற்கு அழைத்திருக்கலாம். [10]இந்த வார்த்தைகளைக் கூறுவதற்கு யூதர்கள் திணறியிருக்க வேண்டும். கிலவுதியு இராயன் அவர்களுடைய மாபெரும் வெறுப்புக்குரிய விரோதியாய் இருந்தார் (18:2), ஆனாலும் அவரது கட்டளைகளைக் காப்பாற்றுவது பற்றி தாங்கள் கவலைப்பட்டது போல அவர்கள் நடித்தார்கள்! நேர்மையற்ற இருதயங்களின் நேர்மையற்ற தன்மைக்கு ஒரு அளவே இல்லை!

[11]இதை “வேண்டுமென்றே தவறாகத் திரித்துக் கூறப்பட்டது” என்று நான் அழைக்கின்றேன். ஏனென்றால், உயிர்த்தெழுதல் பற்றிப் பிரசங்கிப்பதில் ஒரு பகுதியாக இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றதை சுவிசேஷப் பிரசங்கியார்கள் தெளிவாக்குவது வழக்கமாகும். ஆகையால் பூமிக்குரிய வகையில் ஒரு போட்டி அரசர் என்று கருதப்பட முடியாது! [12]லூக்கா தெசலோனிக்கேயில் இருந்த மக்களுக்கு முரணாகப் பெரோயாவில் இருந்த மக்களையே பொதுவாகக் குறிப்பிட்டார் என்று அநேக ஆண்டுகளாக நான் நினைத்திருந்தேன். கடைசியில் நான் இவ்வசனத்தின் சந்தர்ப்பப் பொருளில் உற்று நோக்கும்போது, அவர் பெரோயாவின் யூதர்களை தெசலோனிக்கேயின் யூதர்களுடன் வித்தியாசப் படுத்திக் காட்டினார் என்பதை உணர்ந்தேன். [13]மூலவசனத்திலும் “அதிக நற்குணசாலிகளாய்” இருந்தார்கள் என்று மட்டுமே உள்ளது. “நற்குணம்” என்ற சொற்றொடரானது சிறந்த குடிப்பிறப்பிற்குக் கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டதாகும். இவ்வசனப் பகுதியில் இது பண்பின் சிறப்புத் தன்மையைக் குறிப்பிட்டது என்பது தெளிவாகும். பண்பில் சிறப்புத் தன்மையுடன் இருப்பதென்பது சிறந்த குடிப்பிறப்பைக் காட்டிலும் மேலானது என்பதை உணர்த்துவதற்காக லூக்கா இச்சொற்றொடரை இவ்விடத்தில் வேண்டுமென்றே பயன்படுத்தியிருக்கலாம். [14]இது சகோதரர்களின் கருத்தா பவுலின் கருத்தா அல்லது பரிசுத்த ஆவியானவரின் கருத்தா, என்பதை நாம் அறியவில்லை. இது யாருடைய கருத்தாயிருந்த போதிலும், அவர்கள் பெரோயாவில் தேவையானதற்கும் அதிகமான காலம் தங்கியிருப்பதைப் பவுல் விரும்பவில்லை (வ.15).